பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**14 03 2026** **7 15**

சனிக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. குடியரசு துணைத்தலைவர் திரு. சி. பி. ராதாகிருஷ்ணன் இன்று இமாச்சலப் பிரதேச மாநிலத்திற்கு பயணம் மேற்கொள்கிறார்.

2. பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று அசாம் மாநிலத்தில், 23 ஆயிரத்து 550 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

3. திருநங்கைகள் உரிமைப் பாதுகாப்பு திருத்தச் சட்டத்தை மக்களவையில் நேற்று மத்திய சமூகநீதி மற்றும் அதிகாரம் அளித்தல் துறை அமைச்சர் திரு. வீரேந்திர குமார் தாக்கல் செய்தார்.

4. புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலில் ஆளும் என்.ஆர். காங்கிரஸ் - பிஜேபி கூட்டணியில் தொகுதிப் பங்கீடு இறுதி செய்யப்பட்டுள்ளது.

5. CapCana சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி - ஆஸ்திரியாவின் Neil Oberleitner இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

குடியரசு துணைத்தலைவர் திரு. சி. பி. ராதாகிருஷ்ணன் இன்று இமாச்சலப்பிரதேச மாநிலத்திற்கு பயணம் மேற்கொள்கிறார்.

காங்க்ரா மாவட்டத்திலுள்ள தர்மசாலாவில் நடைபெறவுள்ள இமாச்சலப்பிரதேச மத்தியப் பல்கலைக்கழகத்தின் 9-வது பட்டமளிப்பு விழாவில் அவர் கலந்து கொள்கிறார்.

இந்தப் பயணத்தின் போது தரம்சாலாவில் உள்ள போர் நினைவுச் சின்னத்திற்குச் சென்று குடியரசு துணைத்தலைவர் மரியாதை செலுத்தவுள்ளார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று அசாம் மாநிலத்தில், 23 ஆயிரத்து 550 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

சில்சாரில் உள்ள அம்பிகாபூரில் இன்று நடைபெறவுள்ள விழாவில் பிரதமர் மூன்று முக்கியத் திட்டங்களைத் தொடங்கி வைக்கிறார்.

சுமார் 22 ஆயிரத்து 864 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமையவுள்ள சில்சார் அதிவேக வழித்தடம், சுமார் 565 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமையவுள்ள சில்சார் நகர மேம்பாலம், சுமார்

**122** கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமையவுள்ள பதர்காண்டி விவசாயக் கல்லூரிக்கும் அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

<<<<>>>>

திருநங்கைகள் உரிமைகள் பாதுகாப்பு திருத்தச் சட்டத்தை மக்களவையில் நேற்று சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் திரு. வீரேந்திர குமார் தாக்கல் செய்தார்.

**2019**-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட திருநங்கைகள் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தில் சில முக்கியமான மாற்றங்களைச் செய்வதே இந்த மசோதாவின் நோக்கமாகும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போதுள்ள சட்டத்தில் 'திருநங்கை' என்பதற்கான வரையறையின் கீழ் உண்மையான பாதிப்புக்குள்ளாகும் நபர்களைக் கண்டறிவதில் சிக்கல்கள் ஏற்படுவதாக அரசு கருதுகிறது.

எனவே, உயிரியல் காரணங்களால் சமூகப் புறக்கணிப்பைச் சந்திக்கும் திருநங்கைகளைத் துல்லியமாக அடையாளம் கண்டு, அவர்களுக்குச் சட்டத்தின் பலன்கள் முழுமையாகச் சென்றடைவதை உறுதி செய்ய இந்தத் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளதாக அரசு கூறியுள்ளது.

பாலின அடையாளத்தை ஒருவரது தனிப்பட்ட விருப்பமாகவோ அல்லது சுயமாக அறிவித்துக்கொள்ளும் அடையாளமாகவோ மட்டும்

கருதாமல், முறையான அடையாளப்படுத்துதல் அவசியமென இந்த மசோதா வலியுறுத்துகிறது.

<<<<>>>>

தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. ஞானேஷ் குமாரை பதவியிலிருந்து நீக்கக் கோரி திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட நாடாளுமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மக்களவை மற்றும் மாநிலங்களவையில் நோட்டீஸ் அளித்துள்ளனர்.

இந்த நோட்டீசில் உள்ள உள்ளடக்கம் மற்றும் விதிமுறைகளை மக்களவை மற்றும் மாநிலங்களவைச் செயலகங்கள் ஆய்வு செய்ய உள்ளன.

திரிணாமுல் காங்கிரஸ் சமர்ப்பித்துள்ள இந்த நோட்டீஸ், அவர்களுக்கு அரசியலமைப்பு நிறுவனங்கள் மற்றும் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை இல்லை என்பதையே பிரதிபலிக்கிறது என்று மத்திய அமைச்சர் திரு. எஸ். பி. சிங் பாகேல் கூறினார்.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், அரசியலமைப்பு சார்ந்த நிறுவனங்களின் பிம்பத்தைச் சிதைக்க எதிர்க்கட்சிகள் முயற்சிப்பதாக குற்றம் சாட்டினார்.

<<<<>>>>

ஏர் இந்தியா மற்றும் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் நிறுவனங்கள் இன்று மேற்கு ஆசியாவுக்கு மொத்தம் 80 திட்டமிடப்பட்ட மற்றும் திட்டமிடப்படாத விமானங்களை இயக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளன.

இவ்விரு நிறுவனங்களும் ஜெட்டாவிற்கும், மஸ்கட்டிற்கும் தங்களது வழக்கமான சேவைகளை தொடர்கின்றன.

அதன்படி, ஜெட்டாவிற்கு 10 விமானங்களும், ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் சார்பில் மஸ்கட்டிற்கு 8 விமானங்களும் இயக்கப்படவுள்ளன.

கூடுதலாக, தில்லியிலிருந்து ஒரு முறையும், மும்பையிலிருந்து இரண்டு முறையும் ஏர் இந்தியா நிறுவனம் ஜெட்டாவிற்கு சென்று வரவுள்ளது.

அதேபோல், ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் கோழிக்கோடு மற்றும் மங்களூரு ஆகிய இடங்களிலிருந்து ஜெட்டாவுக்கு தலா ஒரு விமானத்தை இயக்க உள்ளது.

இவை தவிர, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் சவுதி அரேபியாவிற்கு மொத்தம் 62 கூடுதல் விமானங்களை இயக்கவும் அந்நிறுவனங்கள் திட்டமிட்டுள்ளன.

<<<<>>>>

உச்சநீதிமன்ற உத்தரவின்படி, மேற்குவங்கத்தில் சிறப்பு தீவிர திருத்தத்தின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள முதல் கூடுதல் வாக்காளர் பட்டியல் அடுத்த வாரம் வெளியிடப்படவுள்ளது.

ஆரம்பகட்ட பட்டியலில் 60 லட்சத்திற்கும் அதிகமான பெயர்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டதாகத் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதில் சுமார் 15 லட்சம் பெயர்களுக்கான ஆய்வு ஏற்கனவே முடிக்கப்பட்டு தீர்வு காணப்பட்டுள்ளது.

இந்த கூடுதல் பட்டியலில் பெயர்கள் இடம்பெறாதவர்களின் புகார்கள், உச்சநீதிமன்றத்தின் உத்தரவுப்படி அமைக்கப்பட்டுள்ள தீர்ப்பாயங்கள் மூலம் விசாரிக்கப்படும் என்றும் இந்தத் தீர்ப்பாயங்களை அமைக்கும் பணிகள் ஏற்கனவே தொடங்கிவிட்டதாகவும் ஆணையம் கூறியுள்ளது.

இவை அடுத்த வார இறுதிக்குள் செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில், சுமார் 35 லட்சம் வாக்காளர்களின் ஆவணங்களைச் சரிபார்க்கும் பணிகள் மிக வேகமாக நடைபெற்று வருகின்றன.

இவர்களது வழக்குகளும் விரைவில் தீர்க்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலில் ஆளும் என்.ஆர். காங்கிரஸ் - பிஜேபி கூட்டணியில் தொகுதிப் பங்கீடு இறுதி செய்யப்பட்டுள்ளது.

புதுச்சேரியில் நேற்று பிஜேபி மேலிடப் பொறுப்பாளர் திரு. நிர்மல் குமார் சுரானா, அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. மன்சுக் மாண்டவியா ஆகியோர் என்.ஆர். காங்கிரஸ் தலைவர் திரு. ரங்கசாமியை சந்தித்துப் பேசியபோது தொகுதிகளின் எண்ணிக்கை இறுதி செய்யப்பட்டது.

இதன்படி என்.ஆர். காங்கிரஸ் 16 இடங்களில் போட்டியிடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிஜேபிக்கு 14 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு. நிர்மல் குமார் சுரானா கூறினார்.

பிஜேபிக்கு ஒதுக்கப்பட்டுள்ள 14 தொகுதிகளில் இருந்து அஇஅதிமுக உள்ளிட்ட கூட்டணி கட்சிகளுக்கு தொகுதிகள் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தின் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பிரதமரின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு நிதி திட்டத்தின்கீழ், சிறு குறு நடுத்தர விவசாயிகள் சுமார் 73 ஆயிரத்து 500 பேர் பயனடைந்து வருகின்றனர்.

இந்த தொகை உழவுத்தொழிலுக்கு உதவுவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**(Voice Byte - Farmers - 28 Sec)**

<<<<>>>>

நேபாளத்தில் சமீபத்தில் நடந்து முடிந்த தேர்தலைத் தொடர்ந்து, அங்கு அமையவுள்ள புதிய அரசு இந்தியாவுடனான உறவை மேலும் வலுப்படுத்தும் என்று அந்நாட்டிற்கான இந்திய தூதர் திரு. சங்கர் பிரசாத் சர்மா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நேபாளத்தின் பிரதிநிதிகள் சபைத் தேர்தல் அமைதியாகவும், குறித்த காலத்திலும் நடத்தப்பட்டிருப்பது அந்த நாட்டின் நிலையான ஜனநாயக செயல்பாட்டைப் பிரதிபலிக்கிறது என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தியா-நேபாள இருதரப்பு உறவுகள் குறித்துப் பேசிய அவர், இரு நாடுகளுக்கும் இடையே ஏற்கனவே மிகவும் வலுவான உறவு

இருப்பதாகவும், புதிய அரசு அதனை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல முயற்சிக்கும் என்றும் கூறினார்.

<<<<>>>>

மேற்கு ஈராக்கில் அமெரிக்காவின் **KC-135** ரக எரிபொருள் நிரப்பும் விமானம் விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த அந்நாட்டு விமானப்படையின் **6** வீரர்கள் உயிரிழந்துவிட்டதாக அமெரிக்கா கூறியுள்ளது.

இது குறித்து அமெரிக்க விமானப்படை வெளியிட்டுள்ள அறிக்கையில், **Operation Epic Fury** நடவடிக்கையின்போது, நட்பு நாடுகளின் வான்பரப்பில் பறந்து கொண்டிருந்த அந்த விமானம் விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்துக்கான சூழ்நிலைகள் குறித்து தற்போது விசாரணை நடைபெற்று வருகிறது.

இருப்பினும், இந்த விபத்து எதிரிகளின் ஏவுகனை தாக்குதலால் நிகழவில்லை என்று அமெரிக்கா கூறியுள்ளது.

உயிரிழந்த வீரர்களின் குடும்பத்தினருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்ட **24** மணி நேரத்திற்குப் பிறகே அவர்களது அடையாளங்கள் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்படும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

**CapCana சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி - ஆஸ்திரியாவின் Neil Oberleitner இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.**

**நேற்று நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் இந்த இணை, 6-0, 6-3 என்ற செட் கணக்கில் நெதர்லாந்தின் Bart Stevens - அமெரிக்காவின் Vasil Kirkov இணையை வென்றது.**

---------------

**உலகக் கோப்பைக்கான தகுதிச் சுற்று மகளிர் ஹாக்கி இறுதிப் போட்டிக்கு இந்தியா முன்னேறியுள்ளது.**

**<<<<The End>>>>**